IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.361/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | RAJESHKUMAR |
| FATHER'S NAME | : | SELVAM |
| VILLAGE | : | MATHUR |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 28th day of April 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, சுமார் 3, 4 வருடத்த்திற்கு முன்பு ஒரு நாள் நான் திருவிழாவில் இருந்தபோது ஏதோ சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 16.07.2022ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மாரியம்மன் கோவில் அருகே கலையரசன், ஹரிஷ் என்பவரை அசிங்கமாக திட்டியதாகவும், கத்தியால் குத்தியதாகவும், நான் தடுக்க சென்றபோது என்னுடைய தலையை கிழித்துவிட்டதாகவும், கத்தியை காட்டி மிரட்டியதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**